(All Rights Reserved/ முழுப் பதிப்புரிமை உடையது)

# தேசிய வெளிக்கள நிலையம் தொண்டைமானாறு
## இரண்டாம் தவணைப் பரீட்சை - 2023
# National Field Work Centre, Thondaimanaru
## 2nd Term Examination - 2023

NFWC

**வணிகக் கல்வி**
**Business Studies**

Three Hours | Gr. 12 (2024) | 32 | T | I

சுட்டெண் :................................

**அறிவுறுத்தல்கள் :-**

- **எல்லா** வினாக்களுக்கும் **இத்தாளிலேயே** விடை எழுதுக.
- மேலே தரப்பட்டுள்ள இடைவெளியில் உமது **சுட்டெண்ணை** எழுதுக.
- *01* தொடக்கம் *15* வரையுள்ள வினாக்களுக்கு சரியான விடையைத் தெரிவு செய்து அதன் இலக்கத்தை தரப்பட்டுள்ள புள்ளிக் கோட்டின் மீது எழுதுக.
- *16* தொடக்கம் *25* வரையுள்ள வினாக்களுக்குச் சுருக்கமான விடைகளைத் தரப்பட்டுள்ள புள்ளிக் கோட்டின் மீது எழுதுக.
- ஒவ்வொரு வினாவுக்கும் **இரண்டு** புள்ளிகள் வீதம் வழங்கப்படும்.

| பரீட்சகரின் உபயோகத்திற்கு மட்டும் | |
|---|---|
| வினாத்தாள் *1* இற்கானது | |
| வினா இல | புள்ளிகள் |
| *01 - 15* | |
| *16 - 25* | |
| மொத்தம் | |

**01.** மனிதர்களால் கட்டாயமாக நிறைவேற்றப்பட வேண்டிய உடல், உளரீதியான நிலைமையினை பூர்த்திசெய்யும் பல்வேறு முறைகள் அழைக்கப்படுவது,
(1) தேவைகள் (2) விருப்பங்கள் (3) பெறுமதிகள்
(4) கேள்வி (5) பொருட்கள் (……)

**02.** உரிமையின் அடிப்படையில் வணிகங்களை வகைப்படுத்தும்போது அதன் ஒரு வகையாகக் கருதப்படக்கூடியது,
(1) முதனிலை வணிகங்கள் (2) கைத்தொழில் துறை (3) பொதுத் துறை
(4) இலாப நோக்கற்றவை (5) அங்கீகார வணிகம் (……)

**03.** பொருளாதார வாழ்தன்மைக்கு வணிகங்கள் பங்களிப்புச் செய்யும் முறைகளில் பொருத்தமற்றது,
(1) தேசிய பொருளாதார விருத்தி (2) வேலைவாய்ப்புக்களை உருவாக்கல்
(3) புத்துருவாக்கம் (4) சிக்கலான விருப்பங்களை நிறைவுசெய்தல்
(5) சந்தை விரிவாக்கம் (……)

**04.** உற்பத்தித் துறைகள் X நிரலிலும் அவற்றினுள் உள்ளடங்கக்கூடிய உற்பத்திகள் Y நிரலிலும் கீழே தரப்பட்டுள்ள அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன.

| நிரல் X | நிரல் Y |
|---|---|
| *1* – முதலாம் நிலை | A – தகவல் தொடர்பாடல் நடவடிக்கைகள் |
| *2* – இரண்டாம் நிலை | B – உற்பத்திக் கைத்தொழில் |
| *3* – மூன்றாம் நிலை | C – கால்நடை வளர்ப்பு |
| | D – வீட்டுரிமையும் ஆதன வியாபாரமும் |
| | E – கனிய அகழ்வு |
| | F – நிர்மாணக் கைத்தொழில் |

X நிரலில் காட்டப்பட்டுள்ள உற்பத்தி நிலைகளுக்கேற்ப Y நிரலில் தரப்பட்டுள்ள உற்பத்திகளை சரியான ஒழுங்குமுறையில் கொண்டுள்ள விடையினைத் தெரிவுசெய்க.
(1) 1 – C, E / 2 – B, F / 3 – A, D (2) 1 – A, B / 2 – C, D / 3 – E, F
(3) 1 – A, E / 2 – B, D / 3 – E, F (4) 1 – C, E / 2 – B, F / 3 – A, D
(5) 1 – B, C / 2 – D, E / 3 – A, F (……)

(All Rights Reserved/ முழுப் பதிப்புரிமை உடையது)

**05.** பேரினச் சூழல் காரணிகள் சில X நிரலிலும், அவற்றுடன் தொடர்புடைய உதாரணங்கள் சில Y நிரலிலும் தரப்பட்டுள்ளன.

| X | Y |
|---|---|
| 1) பொருளாதாரச் சூழல் | A. வியாபார ஒப்பந்தங்கள் ஏற்படுத்தப்படல். |
| 2) தொழில்நுட்பச் சூழல் | B. வருமானப் பகிர்வில் முரண்பாடுகள் காணப்படல். |
| 3) பூகோளச் சூழல் | C. காலநிலை, வானிலை மாற்றங்கள் ஏற்படல். |
| 4) அரசியல் சூழல் | D. பொருட்கள் காலம் கடந்தவைகளாதல். |
| 5) இயற்கைச் சூழல் | E. திறந்த பொருளாதாரக் கொள்கைகள் பின்பற்றுதல். |

மேல்குறித்தவற்றுள் கூறுகளின் தொடரொழுங்கிற்கமைவாக நிகழ்வுகள் சரியாகப் பொருந்தும் தெரிவு யாது?

1) B, D, A, E, C    2) B, D, A, C, E    3) B, D, E, A, C

4) A, E, C, B, D    5) E, A, D, B, C    (……)

**06.** பின்வருவனவற்றுள் வணிகமொன்றுக்கு வாய்ப்பாக அமையக்கூடிய விடயமொன்றினைத் தெரிவுசெய்க.

(1) மிகச் சிறந்த அனுபவத்துடன் கூடிய முகாமையாளர்கள் காணப்படல்.

(2) சந்தையில் பதிலீட்டுப் பொருட்கள் அதிகமாகக் காணப்படல்.

(3) பொருத்தமானவாறு நிறுவனத்தில் வேலைகள் பகிர்ந்தளிக்கப்படல்.

(4) வழங்குனர்கள் உரிய நேரத்தில் தரமான பொருட்களை வழங்கல்.

(5) நிறுவனத்திலுள்ள பிரிவுகளுக்கிடையில் சிறந்த இணைப்பாக்கம் காணப்படல்.    (……)

**07.** சந்தைப்படுத்தல் ஒழுக்கநெறியினைப் பின்பற்றுவதனால் வணிகமொன்றினால் பெறக்கூடிய அனுகூலமொன்று,

(1) நிதி மோசடிகள் மற்றும் முறையற்ற நிதிப் பாவனை என்பவற்றை தவிர்த்தல்

(2) நிறுவனத்தின் வாழ்தன்மை உறுதிப்படுத்தப்படலும் போட்டியினை வெற்றிகரமான எதிர்கொள்ளலும்.

(3) ஊழியர்களுக்கிடையே ஏற்படக்கூடிய பாதகமான நிலைமைகளைத் தவிர்த்தல்

(4) தரமான பொருட்கள் சேவைகளை வழங்க முடிதல்

(5) தொழிலாளர் மற்றும் தொழில்கொள்வோர்களின் உரிமையினைப் பேண முடிதல்    (……)

**08.** பொருளாதார உறுதிப்பாட்டில் காணப்படக்கூடிய புற விலை மட்ட உறுதித்தன்மை கருதுவது,

(1) அந்நியச் செலாவணி வீதத்தை நிலையாகப் பேணல்

(2) உள்நாட்டு விலை மட்டத்தை நிலையாகப் பேணல்

(3) வட்டி வீதத்தை நிலையான மட்டத்தில் பேணல்

(4) அரசின் வரிக் கொள்கையை நிலையான மட்டத்தில் பேணல்

(5) பணவீக்கத்தை நிலையான மட்டத்தில் பேணல்    (……)

**09.** நிலைபேறான தன்மை என்பது,

(1) சூழல், பொருளாதார மற்றும் சமூகக் காரணிகள் மீதான குறுங்கால நோக்கு

(2) சூழல், பொருளாதார மற்றும் கலாசாரக் காரணிகள் மீதான நீண்டகால நோக்கு

(3) சூழல், அரசியல் மற்றும் சமூகக் காரணிகள் மீதான குறுங்கால நோக்கு

(4) சூழல், பொருளாதார மற்றும் சமூகக் காரணிகள் மீதான நீண்டகால நோக்கு

(5) சூழல், கலாசார மற்றும் அரசியல் காரணிகள் மீதான நீண்டகால நோக்கு    (……)

(All Rights Reserved/ முழுப் பதிப்புரிமை உடையது)

**10.** அண்மையில் இலங்கை வெளிநாட்டுக் கடன்களை மீளச் செலுத்த முடியாத நிலையினை எதிர்கொண்டது. பின்வருவனவற்றில் எக்காரணியினை இலங்கை இழந்ததனால் இந்நிலைமை ஏற்பட்டதாகக் கருதலாம்?

(1) பொருளாதார உறுதித்தன்மை (2) அரசியல் ஒற்றுமை
(3) நிதி உறுதித்தன்மை (4) விலை உறுதிப்பாடு
(5) கொள்கைரீதியான உறுதித்தன்மை (……)

**11.** ஒரு நாட்டிலுள்ள மத்திய வங்கி பின்வரும் நாணயக் கொள்கைச் செயற்பாடுகளை மேற்கொண்டது எனக் கருதுக.

A – அரசிற்குத் தேவையான நிதியினைப் பெறுவதற்காக திறைசேரி உண்டியல்களையும் முறிகளையும் விற்பனை செய்தது.

B – வங்கி வட்டி வீதத்தினைக் குறைத்தது.

C – காசொதுக்கு வீதத்தினை அதிகரித்தது.

மேற்படி நடவடிக்கைகளில் பண வழங்கலை அதிகரிக்கக்கூடிய நடவடிக்கை / நடவடிக்கைகள் எது / எவை?

(1) A மட்டும் (2) A உம் B உம் (3) B மட்டும்
(4) A உம் C ம் (5) B உம் C உம் (……)

**12.** பின்வருவனவற்றுள் எது 'சர்வதேச நுகர்வோர்' அமைப்பினால் முன்வைக்கப்படாத ஒரு நுகர்வோர் உரிமையாகும்?

(1) பொருட்களைத் தெரிவுசெய்வதற்கான உரிமை
(2) கவனத்தை ஈர்ப்பதற்கான உரிமை
(3) இழப்பீட்டைப் பெறுவதற்கான உரிமை
(4) பொருட்கள் தொடர்பான தகவல்களைப் பெறுவதற்கான உரிமை
(5) பாதுகாப்புப் பெறுவதற்கான உரிமை (……)

**13.** பின்வரும் பண்புகளைக் கொண்டிருக்கக்கூடிய வணிக அமைப்புக்களைத் தெரிவுசெய்க.

- தனியார்துறையைச் சார்ந்தவை
- வரையறுக்கப்பட்ட நட்டப்பொறுப்பை கொண்டவை
- சட்ட ஆளுமைப் பண்பினைக் கொண்டவை
- பணிப்பாளர் சபை நிர்வாக அமைப்பைக் கொண்டவை

(1) யுனிலிவர் லிமிட்டட், குமரன் ஸ்ரோர்ஸ்
(2) சில்வா PLC, மல்லாகம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்
(3) வீதி அபிவிருத்தி அதிகார சபை, மஸ்தான் & Co.
(4) அருணா (Pvt) Ltd., அமுதா ஸ்ரோர்ஸ்
(5) பைரவி PLC, சதோச (……)

**14.** தனியுடமை வணிகம் தொடர்பில் சரியான கூற்றினைத் தெரிவுசெய்க.

(1) கணக்காய்வு செய்தல் கட்டாயமானது
(2) பதிவுசெய்தல் கட்டாயமானது
(3) முகாமையில் குடும்ப அங்கத்தவர்களின் பங்குபற்றல் கட்டாயமானது
(4) வருமான வரி செலுத்துதல் கட்டாயமானது
(5) உள்ளூராட்சி அமைப்புக்களின் சட்டப் பிரமாணங்களைப் பின்பற்றுதல் கட்டாயமானது (……)

(All Rights Reserved/ முழுப் பதிப்புரிமை உடையது)

**15.** பின்வருவன சில நிதி நிறுவனங்களாகும்.

A – பங்குத் தரகர் கம்பனி
B – உத்தரவு பெற்ற நிதிக் கம்பனி
C – சந்தைத் தரகர்கள்
D – உத்தரவு பெற்ற விசேட கம்பனி
E – முயற்சியாண்மை மூலதனக் கம்பனி
F – காப்புறுதிக் கம்பனிகள்

மேலே தரப்பட்டுள்ள நிதி நிறுவனங்களில் 'விசேட நிதி நிறுவனங்கள்' எனும் வகுதிக்குள் உட்படுத்தக்கூடிய நிதி நிறுவனங்களைக் கொண்டுள்ள விடையினைத் தெரிவுசெய்க.

(1) A, C, E (2) A, C, D (3) B, E, G (4) D, E, F (5) A, C, F (……)

- ***16* தொடக்கம் *20* வரையுள்ள வினாக்களுக்கு விடையளிப்பதற்காகப் பொருத்தமான சொற்களைக் கொண்டு வெற்றிடங்களை நிரப்புக.**

**16.** (அ) ……………………………… மற்றும் ………………………….. என்பவற்றை உள்ளடக்கிய செயற்பாடு வியாபாரமாகும்.

(ஆ) மனித தேவைகள், விருப்பங்களைப் பூர்த்திசெய்வதற்காக சந்தையூடாக …………………… மற்றும் ……………………….. வழங்கப்படுகின்றன.

**17.** (அ) அமைப்பொன்றில் காணப்படுகின்றதும் அமைப்பின் நடவடிக்கைகள் மீது தாக்கத்தை ஏற்படுத்துவதுமான அழுத்தக் குழுக்கள் மற்றும் நிலைமைகள் என்பன வணிகமொன்றின் …………………………… என அழைக்கப்படுவதோடு வணிகத்திற்கு வளங்களை வழங்கியுள்ள அல்லது நிதியினை செய்திருக்கும் இலாபம் அல்லது நட்டத்தை ஏற்கும் பிரிவினர் ………………………… ஆவர்.

(ஆ) அரசொன்றின் பொருளாதார நோக்கத்தை நிறைவேற்றிக்கொள்வதற்காக …………………… மற்றும் ………………………… தொடர்பாக ஒரு வருடத்தினுள் மேற்கொள்ளப்படும் மொத்தச் செலவுகள் அரசின் செலவுகளாகும்.

**18.** (அ) சர்வதேசரீதியாக ஏற்றுக்கொள்ளக்கூடிய நுகர்வோர் உரிமைகளைப் பிரகடனப்படுத்தியோர் ……………………………………… மற்றும் ……………………………………. ஆவர்.

(ஆ) ஏற்றுமதி அபிவிருத்திச் சபையினால் சிறிய மற்றும் நடுத்தர அளவு வணிகங்களுக்கு …………………………… மற்றும் ……………..……………. வசதிகள் வழங்கப்படுகின்றன.

**19.** (அ) கொகா கோலா, பெப்சி கோலா போன்ற குளிர்பானங்களை போத்தலில் அடைத்து விற்பனை செய்யும் வணிகங்கள் ……………………………… அங்கீகார வணிகங்கள் ஆவதோடு மக் டொனால்ட்ஸ் (Mc Donalds), கேஎவ்சி (KFC), பீட்சா ஹட் (Pittza Hut), சப்வே (Subway) போன்ற உணவுகளை வழங்கும் வணிகங்கள் ……………………………… அங்கீகார வணிகங்கள் ஆகும்.

(ஆ) பாடசாலை மாணவர்களுக்கான புத்தகப் பைகளை உற்பத்தி செய்யும் நிறுவனமொன்று பிஸ்கட் உற்பத்தி நிறுவனமொன்றுடன் இணைதல் ……………………….. இணைப்பு எனவும், மாணவர்களுக்கான அப்பியாசக் கொப்பிகளை உற்பத்திசெய்யும் நிறுவனமொன்று இன்னொரு அப்பியாசக் கொப்பிகளை உற்பத்திசெய்யும் நிறுவனத்துடன் இணைதல் ………………………… இணைப்பு எனவும் அழைக்கப்படும்.

(All Rights Reserved/ முழுப் பதிப்புரிமை உடையது)

**20.** (அ) அரசின் வருடாந்த வரவுசெலவுத் திட்டத்தின் மூலம் தேவையான நிதியினைப் பெற்றுக்கொள்ளும் அரச துறை வணிக அமைப்பாக ………………………………………… காணப்படுவதோடு பொது மக்களுக்குப் பகிரங்கமாக பங்குகளை வழங்கி மூலதனத்தைப் பெற்றுக்கொள்ளும் தனியார் துறை வணிக அமைப்பு ……………………………… ஆகும்.

(ஆ) அரசின் பிணைப்பத்திரங்களை முதன்முறையாக விற்பனை செய்து பணத்தைப் பெற்றுக்கொள்ளும் சந்தை ……………………………… ஆகும். இச்சந்தையில் பிரவேசிப்பதற்கு இலங்கை மத்திய வங்கியினால் அனுமதி வழங்கப்பட்டுள்ள நிறுவனங்கள் ………………………………… ஆகும்.

- ***21 தொடக்கம் 25 வரையான வினாக்களுக்கு மிகப் பொருத்தமான விடை எழுதுக.***

**21.** 'சேவைகள்' கொண்டிருக்கக்கூடிய பண்புகள் நான்கு தருக.

1. ……………………………………………………………………………………………………
2. ……………………………………………………………………………………………………
3. ……………………………………………………………………………………………………
4. ……………………………………………………………………………………………………

**22.** வணிகமொன்று எதிர்காலத்தில் முகங்கொடுக்கவேண்டிய நிச்சயமற்ற தன்மைகள் / இடர்கள் நான்கு தருக.

1. ……………………………………………………………………………………………………
2. ……………………………………………………………………………………………………
3. ……………………………………………………………………………………………………
4. ……………………………………………………………………………………………………

**23.** நிலைபேறான சூழல் பாதுகாப்பினை அடைந்துகொள்வதற்காக வணிகங்கள் செயற்படும்பொழுது விசேடமாகக் கவனம்செலுத்த வேண்டிய விடயங்கள் எவை?

1. ……………………………………………………………………………………………………
2. ……………………………………………………………………………………………………
3. ……………………………………………………………………………………………………
4. ……………………………………………………………………………………………………

**24.** இலங்கை அரசால் பெறப்படும் வரியல்லாத வருமானங்களின் பிரதான வகுதிகள் நான்கு தருக.

1. ……………………………………………………………………………………………………
2. ……………………………………………………………………………………………………
3. ……………………………………………………………………………………………………
4. ……………………………………………………………………………………………………

**25.** அரச கூட்டுத்தாபனமொன்று மூலதனத்தைத் திரட்டிக்கொள்ளக்கூடிய வழிகள் எவை?

1. ……………………………………………………………………………………………………
2. ……………………………………………………………………………………………………
3. ……………………………………………………………………………………………………
4. ……………………………………………………………………………………………………

*****

(All Rights Reserved/ முழுப் பதிப்புரிமை உடையது)

NFWC

# தேசிய வெளிக்கள நிலையம் தொண்டைமானாறு
## இரண்டாம் தவணைப் பரீட்சை - 2023
# National Field Work Centre, Thondaimanaru
## 2nd Term Examination - 2023

**வணிகக் கல்வி**
**Business Studies**

**Gr. 12 (2024)** | **32** | **T** | **II**

**அறிவுத்தல்கள்:**

- ஒவ்வொரு பகுதியிலிருந்தும் ஆகக் குறைந்தது இரண்டு வினாக்களையேனும் தெரிவுசெய்து எல்லாமாக **ஐந்து** வினாக்களுக்கு விடை தருக.

**பகுதி I**

***01.*** கீழ்வரும் விடய ஆய்வினை கருத்தில்கொண்டு (i) தொடக்கம் (iv) வரையான வினாக்களுக்கு விடை தருக.

வடக்கில் அதிகளவு இயற்கையாகக் கிடைக்கப்பெறும் பனையோலைகளைப் பிரதான மூலப் பொருளாகப் பயன்படுத்தித் தொப்பிகளை பல்வேறுபட்ட அளவுகளிலும் வடிவங்களிலும் உற்பத்திசெய்யும் “நேச்சர் கப் (Nature Cap)” எனும் பெயரில் வணிகத்தை நடாத்தும் பட்டதாரியான சுமங்கலி என்பவர் தனது வணிகத்தை மேலும் விருத்திசெய்யும் நோக்கில் சூழல் ஆய்வொன்றினை மேற்கொள்ளத் தீர்மானிக்கிறார்.

(i) (அ) மேற்படி வணிகத்தினால் நிறைவுசெய்யப்படும் மனித தேவையினையும் விருப்பத்தினையும் குறிப்பிடுக?
*(01 புள்ளி)*

(ஆ) மேற்படி வணிகத்தினால் ‘தகவல்’ எனும் உற்பத்திக் காரணியாகப் பயன்படுத்தக்கூடியவற்றை குறிப்பிடுக.
*(01 புள்ளி)*

(ii) மேற்படி வணிகத்தினால் நிறைவேற்றப்படும் பிரதான வணிகக் கருமங்கள் இரண்டையும் குறிப்பிடுக. *(02 புள்ளிகள்)*

(iii) வணிகச் சூழலை ஆய்வுசெய்வதன் மூலம் சுமங்கலி பெறக்கூடிய அனுகூலங்களைக் குறிப்பிடுக.
*(02 புள்ளிகள்)*

(iv) உரிமையாளராக சுமங்கலி மேற்படி வணிகத்தின் வெற்றியின் மீதும் மற்றும் தோல்வியின் மீதும் எவ்வாறு செல்வாக்கு செலுத்த முடியும் என்பதற்கு ஒவ்வொரு காரணம் தருக. *(02 புள்ளிகள்)*

(v) ஒரு பிரதேசமொன்றில் காணப்படக்கூடிய பின்வரும் வணிகங்களை முதல் நிலை, இரண்டாம் நிலை மற்றும் மூன்றாம் நிலை எனவும், விவசாயத் துறை, கைத்தொழில் துறை மற்றும் சேவைகள் துறை எனவும் வகைப்படுத்திக் காட்டுக.

| | |
|---|---|
| 1. ஆனந் கட்டட ஒப்பந்தகாரர் | 2. டேவிட் கோழிப் பண்ணை |
| 3. அல்லி மிக்ஷர் | 4. ஜீவன் சுப்பர் மார்க்கட் |
| 5. ரோஷி காடின் (Roshi Garden) | 6. சுவர்ணா லொட்ஜ் |

(All Rights Reserved/ முழுப் பதிப்புரிமை உடையது)

விடையளிப்பதற்கு கீழ்வரும் மாதிரினைப் பயன்டுத்துக.

| | முதல் நிலை | இரண்டாம் நிலை | மூன்றாம் நிலை |
|---|---|---|---|
| விவசாயத் துறை | ……………………. ……………………. | ……………………. ……………………. | ……………………. ……………………. |
| கைத்தொழில் துறை | ……………………. ……………………. | ……………………. ……………………. | ……………………. ……………………. |
| சேவைகள் துறை | ……………………. ……………………. | ……………………. ……………………. | ……………………. ……………………. |

*(02 புள்ளிகள்)*

**(மொத்தம் 10 புள்ளிகள்)**

***02.*** (i) வணிகத்தின் மீது அக்கறை செலுத்தும் பிரிவினர்களுக்கும் சமூகத்திற்கும் அழுத்தங்களை ஏற்படுத்தும் காரணிகள் நான்கினைக் குறிப்பிடுக. *(02 புள்ளிகள்)*

(ii) சூழல் நிலைபேறான தன்மையினை உறுதிப்படுத்துவதற்காக வணிகங்களால் மேற்கொள்ளப்படும் பின்வரும் நடவடிக்கைகளுக்குப் பொருத்தமான எண்ணக்கருவினைப் பெயரிடுக.

(அ) மீன்பிடித்தொழிலில் ஈடுபடும் வணிகமொன்று மீன் வளர்ப்பில் ஈடுபடுதல்.

(ஆ) வைக்கோலிலிருந்து கடதாசியினை உற்பத்திசெய்தல்.

(இ) அழிவடையாத பொலித்தீன்களைப் பயன்படுத்தாதிருத்தல்.

(ஈ) சாப்பாடு பொதிசெய்யும் பொலித்தீன்களுக்குப் பதிலாக சாப்பாட்டுப் பெட்டியினைப் பயன்படுத்தல். *(02 புள்ளிகள்)*

(iii) இலங்கை அரசாங்கத்தினால் மேற்கொள்ளக்கூடிய மூலதனச் செலவுகள் இரண்டையும் நடைமுறைச் செலவுகள் இரண்டையும் குறிப்பிடுக.
*(02 புள்ளிகள்)*

(iv) உமது நண்பரொருவர் உணவகம் ஒன்றினை நடாத்துகிறார் எனவும் நுகர்வோர் பாதுகாப்பினை பின்பற்றுவதன் மூலம் தன்னால் உச்ச இலாபத்தினைப் பெற முடியாது என்ற கருத்தினை அவர் கொண்டுள்ளார் எனவும் கருதுக. நுகர்வோர் பாதுகாப்பினைப் பின்பற்றுவதனால் வணிகங்களுக்கு கிடைக்கும் நன்மைகளை எவ்வாறு அவருக்கு விளக்குவீர்? *(02 புள்ளிகள்)*

(v) (அ) மத்திய வங்கியின் திறந்த சந்தை நடவடிக்கை என்பது யாது? *(01 புள்ளி)*

(ஆ) பொருளாதார நெருக்கடி நிலைமைகளிலிருந்து மீள்வதற்கு இலங்கை பல நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. இவற்றில் "கடன் மறுசீரமைப்பு (Debt Restructuring)" எனப்படுவது யாது?
*(01 புள்ளி)*

**(மொத்தம் 10 புள்ளிகள்)**

***03.*** (i) (அ) 'முறையான அமைப்பு' எனப்படுவது யாது? *(01 புள்ளி)*

(ஆ) முறையான அமைப்பொன்றில் காணப்படக்கூடிய பொதுப் பண்புகள் இரண்டு தருக. *(01 புள்ளி)*

(ii) பங்குடமை வணிகங்களில் பல தனிநபர்கள் ஒன்றிணைவதன் மூலம் பாரிய மூலதனத்தைத் திரட்டக்கூடியதாக இருந்தாலும் தனியுடமை வியாபார அமைப்புக்கள் சில விசேடமான அனுகூலங்களைக் கொண்டுள்ளன. அத்தகைய அனுகூலங்கள் நான்கினைக் குறிப்பிடுக. *(02 புள்ளிகள்)*

(iii) (அ) கூட்டிணைக்கப்பட்ட கம்பனிகளின் 'தொடர்ந்தியங்கும் தன்மை (Perpetual Succession Capacity)' எனப்படுவது யாது? *(01 புள்ளி)*

(ஆ) வெளிநாட்டுக் கம்பனிகள் (Overseas Companies) எனப்படுபவை யாவை? *(01 புள்ளி)*

(All Rights Reserved/ முழுப் பதிப்புரிமை உடையது)

(iv) பின்வரும் வணிக நிறுவனங்களுக்குப் பொருத்தமான கம்பனி அமைப்பு வகைகளைப் பெயரிட்டு அவற்றை விளக்குக.

(அ) ஹிருஷ் பிஎல்சி (Hirush PLC) (ஆ) வரையறுத்த சுல்தான் (Sultan Ltd.) *(02 புள்ளிகள்)*

(v) (அ) அரச திணைக்களங்களின் பண்புகளைக் குறிப்பிடுக. *(01 புள்ளி)*

(ஆ) அங்கீகாரம் பெறுபவர் அங்கீகார ஒப்பந்தத்திற்கேற்ப நிறைவேற்ற வேண்டிய கடப்பாடுகள் யாவை? *(01 புள்ளி)*

**(மொத்தம் 10 புள்ளிகள்)**

## பகுதி II

**04.** (i) (அ) கூட்டுறவு அமைப்புக்கள் இன்னமும் ஒரு வெற்றிகரமான அமைப்பாகக் கருதப்படாமைக்கான காரணங்கள் யாவை? *(01 புள்ளி)*

(ஆ) கூட்டுறவு அமைப்புக்களை வளர்ச்சியடையச் செய்வதற்கு நீர் முன்வைக்கக்கூடிய ஆலோசனைகள் இரண்டினைக் குறிப்பிடுக. *(01 புள்ளி)*

(ii) வணிகக் கூட்டுக்கள் இடம்பெறக்கூடிய பின்வரும் இரண்டு முறைகளையும் விபரிக்க.

(அ) ஒன்றிணைதல் (Mergers / Amalgamation) *(01 புள்ளி)*

(ஆ) கையகப்படுத்தல் (Aquisition) *(01 புள்ளி)*

(iii) அங்கீகார ஒப்பந்தமொன்றில் இடம்பெறக் கூடிய விடயங்கள் நான்கினைக் குறிப்பிடுக. *(02 புள்ளிகள்)*

(iv) பின்வரும் வணிக இணைப்புக்களை எவ்வகையான வணிக இணைப்பு என இனங்கண்டு எழுதுக.

(அ) எழுதுபொருட்களை உற்பத்திசெய்யும் இரண்டு வணிகங்கள் இணைதல்

(ஆ) யூனியன் அஷுரன்ஸ் ஜெனரல் கம்பனி மற்றும் ஏசியன் எலாயன்ஸ் பொதுக் கம்பனி என்பன ஒன்றிணைந்து பெயா பெஸ்ட் (Fair First) எனும் புதிய கம்பனி ஒன்றினை உருவாக்குதல்

(இ) பாடசாலை புத்தகப் பைகளை உற்பத்திசெய்யும் நிறுவனமொன்று பால்மா உற்பத்திசெய்யும் நிறுவனமொன்றுடன் ஒன்றிணைதல்

(ஈ) தளபாடங்களை உற்பத்திசெய்யும் வணிகமொன்று பலகைகளை உற்பத்திசெய்யும் வணிகமொன்றுடன் இணைதல் *(02 புள்ளிகள்)*

(v) சாருதி என்பவர் முறைமையான திட்டமிடலிலும் பார்க்க தனது ஆற்றல்கள் மீது நம்பிக்கை கொண்டிருந்ததுடன் மிகவும் சிக்கலான பணியாயினும் அதனை ஆரம்பித்து தொடர்ச்சியாக செயற்படுத்தும் ஆற்றலைக் கொண்டவராவார். அவர் வணிக இலக்குகளை அடைந்து கொள்வதற்குப் புதுமையான எண்ணங்களைக் கொண்டுள்ளார்.

மேற்படி சம்பவத்தில் சாருதி கொண்டுள்ள முயற்சியாண்மைத் திறன்களைத் தருக. *(02 புள்ளிகள்)*

**(மொத்தம் 10 புள்ளிகள்)**

**05.** (i) வணிக நடவடிக்கைகளை முயற்சியுடன் வெற்றிகரமாக மேற்கொள்ளும் வணிகர்களும் முயற்சியாளர்களே என்ற கருத்தினை உமது நண்பர் கொண்டுள்ளார் எனக் கருதுக. வணிகர்களுக்கும் முயற்சியாளர்களுக்கும் இடையிலான வேறுபாட்டினை எவ்வாறு அவருக்கு விபரிப்பீர்? *(02 புள்ளிகள்)*

(ii) முயற்சியாளர்களில் சிலர் பிறப்பவர்களாயினும் முயற்சியாண்மைப் பண்புகளைக் கொண்டிராத ஒருவரிடத்தில் அப்பண்புகளை விருத்திசெய்யவும் முடியும். அம்முறைகள் நான்கினைக் குறிப்பிடுக. *(02 புள்ளிகள்)*

(All Rights Reserved/ முழுப் பதிப்புரிமை உடையது)

(iii) (அ) சிறிய நடுத்தர அளவு வணிகங்களை இனங்காண்பதற்குப் பயன்படுத்தக்கூடிய அளவிடக்கூடிய நியதிகளைக் குறிப்பிடுக. *(01 புள்ளி)*

(ஆ) முயற்சியாளர் ஒருவர் கொண்டிருக்க வேண்டிய பண்புகளில் ஒன்றான 'ஆக்கத்திறன் (Creativity)' எனப்படுவது யாது? *(01 புள்ளி)*

(iv) பங்குடமை வணிக அமைப்புக்களில் பின்வரும் விடயங்கள் தொடர்பாக செல்வாக்கு செலுத்தும் சட்டங்களைக் குறிப்பிடுக.

(அ) ஆகக் கூடிய பங்காளர் எண்ணிக்கை 20 என வரையறுத்தல்.

(ஆ) பங்குடமை அமைப்பொன்றினைப் பதிவுசெய்தல்

(இ) இறந்த அல்லது விலகிய பங்காளர்களின் உரிமையாண்மைப் பெறுமதிக்கு 5% வட்டி வழங்குதல்

(ஈ) பங்குடமை உறுதியினைக் (Partnership deed) கொண்டிருத்தல் *(02 புள்ளிகள்)*

(v) பல்வேறுபட்ட வணிக அமைப்புக்களுக்கு அரசினால் பல உதவிகளும் வழிகாட்டல்களும் வழங்கப்படுகின்றன. வணிகங்களுக்கு அவற்றின் முக்கியத்துவத்தினைக் குறிப்பிடுக. *(02 புள்ளிகள்)*

**(மொத்தம் 10 புள்ளிகள்)**

***06.*** (i) (அ) தளபாடங்களைக் கொள்வனவு விற்பனை செய்யும் சந்திரா என்பவர் விற்பனை மூலம் பெறப்படும் காசு மற்றும் காசோலைகளை தினமும் தனது நடைமுறைக் கணக்கில் வைப்புச்செய்வதுடன் செலவுகளைக் காசோலை மூலம் மேற்கொள்கிறார்.
இங்கு குறிப்பிடப்படும் பண வகைகள் இரண்டினைக் குறிப்பிடுக. *(01 புள்ளி)*

(ஆ) பணத்தின் 'பெறுமானத் திரட்டுத் தொழிற்பாடு' எனப்படுவது யாது? *(01 புள்ளி)*

(ii) வரவட்டை, கடனட்டை போன்ற அட்டைகள் மூலமான கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்படுவதை இலகுபடுத்துவதற்காக வங்கிகளால் வழங்கப்படும் சேவைகள் யாவை? *(02 புள்ளிகள்)*

(iii) அரச உயரதிகாரியாக கடமையாற்றி ஓய்வுபெற்ற அமிர்தன் என்பவர் தனக்கு கிடைத்த ஊழியர் சேமலாப நிதி மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதி என்பவற்றில் ஒரு பகுதியை இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தில் ஆயுள் காப்புறுதியொன்றினை மேற்கொள்ளப் பயன்படுத்தியதுடன் இன்னுமொரு பகுதியினை புதிய வணிகமொன்றினை ஆரம்பிப்பதற்காக இலங்கை வங்கி நடைமுறைக் கணக்கொன்றில் வைப்புச் செய்தார். தனது வணிக நடவடிக்கைக்காக புதிய மோட்டார் வாகனமொன்றினை குத்தகை அடிப்படையில் கொள்வனவு செய்வதற்காக எல்பி பினான்ஸ் (LB Finance) கம்பனியுடன் ஒப்பந்மொன்றினையும் மேற்கொண்டார்.
மேற்படி சம்பவத்தில் தரப்பட்டுள்ள நிதி நிறுவனங்களை கீழே தரப்பட்டுள்ள நிதி நிறுவனங்களின் வகைப்படுத்தலின் கீழ் குறிப்பிட்டுக் காட்டுக.

(அ) வங்கித் துறை

(ஆ) வைப்புக்களை ஏற்கும் ஏனைய நிதி நிறுவனங்கள்

(இ) ஒப்பந்த சேமிப்பு நிறுவனங்கள் *(02 புள்ளிகள்)*

(iv) (அ) பங்குத் தரகர் கம்பனிகள் (Share brokers) எனப்படுவோர் யாவர்? *(01 புள்ளி)*

(ஆ) ஒப்புறுதியாளர் (Underwriters) என்பது யாது? *(01 புள்ளி)*

(v) குத்தகைக் கம்பனிகள் மூலம் வணிகருக்குக் கிடைக்கும் அனுகூலங்கள் யாவை? *(02 புள்ளிகள்)*

**(மொத்தம் 10 புள்ளிகள்)**

*****